**தலைப்பு 203 – கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

---

கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை மற்றும் கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| சேவையை கைவிட்டுச் சென்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 125,148 ஆக இருந்ததுடன், 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் இந்த மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. அவற்றுள் ரூபா 14,590 தொகை 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து கிடைத்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 110,558 ஆன கடன் மீதி தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பிணையாளர்கள் தொடர்பிலான விபரங்களை பெற்றுக்கொள்வதற்காக கடன் கோவை எமது திணைக்களத்திறகு அனுப்பி வைக்குமாறு வெளிநாட்டு அலுவல்கள் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்கத்தினால் அறிவிக்கப்பட்டவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்தினால் 01 மீண்டெழும் செலவின விடயத்திற்காக மற்றும் 4 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 25,566,592 தொகை அல்லது 15 சதவீதம் முதல் 54 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடுகள் எஞ்சியுள்ளன. | ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளில் உரிய பணியை மேற்கொள்ள நேர்கின்றமை. | போதியளவான கட்டுநிதி கிடைக்காமை, எதிர்பார்த்த செலவினம் ஏற்படாமை, பழுதுபார்த்தல்கள் குறைவடைந்தமை, சில செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமை போன்ற விடயங்களின் காரணமாக சேமிப்புகள் ஏற்பட்டிருந்தன. |

### 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 94(I) இன் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டினை மிகைத்து செலவினமொன்று அல்லது கடப்பாடொன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட கூடாத போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் 5 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டிலான சேமிப்பான ரூபா 18,888 தொகையை விஞ்சி ரூபா 447,266 ஆன பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிதியேற்பாட்டு எல்லையினுள் செலவினங்கள் அல்லது கடப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட வேண்டும். | ஆண்டின் இறுதியில் இடம்பெறும் அரச கிறிஸ்மஸ் விழா மற்றும் ஏனை விழாக்களின் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள், கூட்டிணைந்த படிகளை திருத்தியமைத்தல், புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளல் மற்றும் பல்வேறு ஒப்பந்த சேவைகளுக்காக செலவினம் மேற்கொள்ள நேர்கின்றமை இதற்கு காரணமாகும். |

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| 2010 நவம்பர் 10 ஆந் திகதி ஏற்பட்ட அவசர வெள்ள நிலமை காரணமாக மறை ஆசிரியர்களின் 430 சீருடைகளுக்கு சேதம் ஏற்பட்டிருந்ததுடன், அதனல் ஏற்பட்ட நட்டமானது ரூபா 354,750 ஆகும். நிதிப்பிரமாணம் 105 இன் பிரகாரம் அறவிடப்படக்கூடிய பெறுமதியானது ரூபா 107,500 ஆக இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இந்த நட்டம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பிலான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கைத்தவறுதலொன்றாக அந்த பெறுமதி குறிப்பு 1 இல் காண்பிக்கப்பட்டிராததுடன் , அதனை சரியாக தயாரித்து சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நவடிக்கை எடுக்கப்படும். |

4. **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல் இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், மீளாய்வாண்டிற்குரியதாக திணைக்களத்தினால் தமது விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்குரிய அடைவுகளும் இலக்குகளின் அடைவினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல் நிரலின் நோக்கங்களை அடைவதற்கு பங்களிப்பு செய்ய வேண்டும். | திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நியாயமான சமூகமொன்றினை நோக்கிய இலக்குகளின் அடிப்படையில் அடைவினை அளவிடுவதற்கு தேவையான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

## 5. நல்லாளுகை

### 5.1 பொது மக்களுக்கு சேவையை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 5/2008 ஆம் இலக்க மற்றும் 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2008 (1) ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினதும் வதியுநர்/சேவைபெறுநர் விஞ்ஞாபனமொன்றினை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் இடம்பெற வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வதியுநர் விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | திணைக்களத்தின் ஆரம்பதில் 2008 ஆம் ஆண்டின் போது வதியுநர்/சேவைபெறுநர் விஞ்ஞாபனமொன்றினை தயாரித்து புத்தசாசன அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. தற்போது அது தொலைந்து போயுள்ளமையால் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படும் பணிகளின் தன்மையும் அந்த காலப்பகுதியை விட மாற்றமடைந்துள்ளமையால் வதியுநர் விஞ்ஞாபனமொன்றினை மீள தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. |